
பிறகு
இந்தியாவில் இருந்து பேரழிவு, ஆபத்து
மற்றும் மீட்பு பற்றிய வரைகலை கதைகள்

பிறகு

இந்தியாவில் இருந்து பேரழிவு, ஆபத்து
மற்றும் மீட்பு பற்றிய வரைகலை கதைகள்

தொகுப்பாளர்கள்
வினிதா நல்லா மற்றும் நிகால் ரஞ்சித்

இல்லஸ்ட்ராட்டோர்
சுவாதி அல்சே

மொழிபெயர்த்தது
ரமணா'ஸ் ட்ரெண்ட்

விமர்சகர்
ரோஜர் ஃப்யூ , கரீமா ஜெயின், சாந்தினி சிங்,
ஹேஸல் மார்ஷ், அமீர் பசாஸ்

IIHS authors: Vineetha Nalla, Nihal Ranjit, Yashodara Udupa, Mythili Madhavan, Jasmitha Arvind, Garima Jain, Teja Malladi
Published in India by the Indian Institute for Human Settlements
Edition published in: 2022

ISBN : 9788195648580
DOI : https://doi.org/10.24943/9788195648580
Suggested Citation:
Nalla, V., & Ranjit, N. (Eds.). (2022). Piragu: India-vil irundhu perazhivu aapaththu meetpu patriya varaikalai kadhaigal. Indian Institute for Human Settlements. https://doi.org/10.24943/9788195648580

Copyright and Use: Copyright in this Work rests with the authors subject to the terms specified herein. For permission to reproduce this Work, it is necessary to contact IIHS or the authors of the copyright. Under the IIHS CC BY NC SA 4.0 licence, any person is free to share, to copy, distribute and transmit the Work under the following conditions:

- **Attribution** –Such person must attribute the Work in the manner specified by the authors or licensor (but not in any way that suggests that authors or licensor endorses the person/ or the person's use of the Work).
- **Non-commercial** –Such person may not use this Work for commercial purposes.

With the understanding that:

- **Waiver** : Any of the above conditions may be waived if such person gets appropriate permission from IIHS or from all such copyright holders concerned.
- **Public Domain** : Where the Work or any of its elements is in the public domain under applicable law, that status is in no way affected by the license.
- **Share Alike** : If the Work is remixed, transformed or built upon, further contributions shall be distributed under the same license as the original aforesaid license.
- **Other Rights** : In no way are any of the following rights affected by the license:
    - Fair dealing or fair use rights, or other applicable copyright exceptions and limitations, including the fair dealing rights of IIHS;

- The authors' moral rights;
- Rights other persons may have either in the Work itself or in how the Work is used, such as publicity or privacy rights.

Explanation: "Work" means and includes the literary and/or artistic work offered under the terms of this license including without limitation any production in the literary, scientific and artistic domain, whatever may be the mode or form of its expression including digital form, such as a book, pamphlet and other writing; a work of drawing, painting, architecture, sculpture, engraving or lithography; a photographic work to which are assimilated works expressed by a process analogous to photography; a work of applied art; an illustration, map, plan, sketch or three-dimensional work relative to geography, topography, architecture or science; a performance; a broadcast; a phonogram; a computer programme; and a compilation of data to the extent it is protected as a copyrightable work.

All queries on rights and licenses should be addressed to: library@iihs.ac.in.

ஒடிசா, தமிழ்நாடு மற்றும் கேரளாவில் அனைத்து
பேரிடர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

பொருளடக்கம்

நன்றி ix

முன்னுரை xi

சூறாவளி புகலிடம் 1
வினிதா நல்லா மற்றும் நிகால் ரஞ்சித்

காத்திருத்தல் 17
யெஷோதரா உடுப்பா

பிழைப்பை தேடி போகிறார்கள் 29
மைதிலி மாதவன்

விளையாட ஒரு புது இடம் 43
ஐஷ் மிதா அரவிந்த்

உள்ளே வராதே 59
கிராமின் ஜெயின்

மீட்டமைப்பதை குறித்து பேசும் போது நாம் எதை பேச மறுக்கிறோம் 75
தேஜா மாலதி மற்றும் நிகால் ரஞ்ஜித்

முடிவுரை ரோஜர் ஃப்யூ 102

மேலும் படிக்க 104

நன்றி

தங்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களையும் மற்றும் பேரிடர் தொடர்பான தங்கள் கருத்துக்களையும் எங்களுடன் பகிர்ந்துக்கொண்ட ஒடிசா, தமிழ்நாடு மற்றும் கேரளா மாநில பேரிடர் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பங்காளர்கள்.
ரோஜர் ஃப்யூ, கரீமா ஜெயின், சாந்தினி சிங், ஹேஸல் மார்ஷ் மற்றும் அமீர் பசாஸ் ஆகிய எங்கள் விமர்சகர்களுக்கு அவர்களது தொடர்ச்சியான ஆதரவு மற்றும் உதவிக்கு.
கதைக்குரிய வரைவுகளை படித்துப்பார்த்து தங்களது மேன்மைமிகு பரிந்துரைகளை எடுத்துரைத்த கார்சி சென், காவ்யா பி. குமார், நம்ரதா கபூர், மதுமதி ஸ்ரீநிவாசன், மற்றும் IIHS -ன் வேர்டு ஆய்வகம்.
இப்புத்தக ஆக்கத்தில் உதிவியாக இருந்த மொஹம்மது ஃபயாஸ் மற்றும் எலியாஸ் மேத்யூ எங்கள் மொழிப்பெயர்ப்பாளர்கள்: சுதிர் நாயக் (ஓடியா) மற்றும் இரமணா'ஸ் டிரெண்டு குழுவினர் (மலையாளம் மற்றும் தமிழ்).
கண்ணித்துடன் கூடிய மீட்டமைப்பு (RwD) திட்டத்தின் அங்கங்களாக இருந்த கிழக்கு அங்க்லியா பல்கலைக்கழகம் (UAE) மற்றும் மனித தீர்வுகளுக்கான இந்திய கழகம் (IIHS) -ன் சகாக்கள். மேற்கூறிய மூன்று மாவட்டங்களையும் நேரில் சென்று பார்வையிடுவதை சாத்தியப்படுத்திய RwD திட்டத்திற்கு நிதியுதவி வழங்கிய ஐக்கிய இராஜ்ஜியத்தின் சர்வதேச அறைகூவல் ஆராய்ச்சி நிதியின் கீழ் உதவி பெற்ற ஆங்கிலேய கலைக்கூட நிலை வளர்ச்சி திட்டம்.
இப்புத்தகத்தின் ஆக்கத்திற்கு உதவியாக இருந்த UEA -ன் QR GCRF நிதி
அருமையான ஓவியங்களையும் பொறுமையையும் நல்கிய செல்வி. ஸ்வாதி அல்சே.
எங்கள் அனைத்து பங்களிப்பாளர்களும்.

முன்னுரை

பேரிடருக்கு பிந்தைய வாழ்க்கை என்பது ஒடிஸா, தமிழ்நாடு, மற்றும் கேரளா ஆகிய இந்திய மாநிலங்களிலிருந்து பேரிடரின் தாக்கங்களையும் மற்றும் மீட்டமைப்பையும் நமக்கு காட்சி வர்ணனையாக வழங்குகிறது. இத்தொகுப்பின் மையத்தில் தான் பேரிடரால் பாதித்த மக்கள், மக்கள் வகுப்புகள், மற்றும் இடங்களை ஊடகமும், அரசாங்கமும், அரசு சாரா அமைப்புகளும், மற்றும் கொள்கை ஆவணங்களும் எப்படி சித்தரித்தன எனும் 'உருவகிப்பின்' சிந்தனை காணப்படுகிறது. பேரிடருக்கு பிந்தைய சித்தரிப்புகள் அவ்வப்போது பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவங்களை தரநிலைப்படுத்தி அவர்களை உதவியற்ற பலியாட்களாக வெளிக்காட்டுகிறது. வீட்டு வசதி மற்றும் இதர சடப்பொருள் கட்டுமானம் போன்ற அதிக 'புலனாகக்கூடிய' மற்றும் வெளிப்படையான மீட்டமைப்பு ஆலோசனைகளை அவர்கள் அமைக்கவும் ஊக்கப்படுத்தவும் செய்து, அதன்மூலம் பாதிக்கப்பட்டவர்களின் உண்மையான மீட்டமைப்பிற்கான தேவைகளை மறைக்கச்செய்கிறார்கள். பேரிடர் தாக்கத்தின் அனுபவங்கள் மக்கள் வகுப்புகளின் நடப்பிலிருக்கும் சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலைகளின் அடிப்படையில் மாறுபடும் என்கிற பட்சத்தில், அத்தகு சித்தரிப்புகள் மீட்டமைப்பிற்கான முன்னுரிமைகள் மீதான ஆலோசனைகளை ஊக்குவித்து அதன்மூலம் அரசாங்கம் மற்றும் உதவி முகமைகளிடமிருந்து பெறும் உதவியை தீர்மானிக்கும்.

2018 முதல் 2021 வரையிலான கடந்த மூன்று ஆண்டுகளாக, மனித தீர்வுகளுக்கான இந்திய கழகம் (IIHS) மற்றும் கிழக்கு ஆங்கிலியா பல்கலைக்கழகம் (UAE) ஆகிய நிறுவனங்களிலிருக்கும் ஆராய்ச்சியாளர்களை கொண்ட 'கண்ணியத்துடன் மீட்டமைத்தல்' திட்டக்குழு பேரிடருக்கு பிந்தைய மீட்டமைப்பு அனுபவங்களை நல்லமுறையில் புரிந்துக்கொள்ள பணியாற்றியது. மூன்று மாநிலங்களிலுள்ள வெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை பலமுறை நேரில் சென்று சந்தித்ததில் தங்கள் பேரிடர் அனுபவங்களையும்

மற்றும் மீட்டமைப்பு மீதான தங்கள் கருத்துகளையும் தெரிவித்த பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்கள் வகுப்பினரையும், அரசாங்க பங்குதாரர்களையும், சமூக ஆர்வலர்களையும், கல்வியாளர்களையும், பத்திரிகையாளர்களையும், மற்றும் நாடகக் கலைஞர்களையும் சந்தித்து பேசும் பல சந்தர்ப்பங்கள் எங்களுக்கு கிடைத்தது.

உருவகிப்பு ஆராய்ச்சி என வரும்போது, சாம்பல் இலக்கியமும் கல்விசார்ந்த வெளியீடுகளும் தினசரி ஆபத்துக்கள் மற்றும் பாதிப்புகளின் வேறுபட்ட கதைகளை கவனத்திற்குள் கொண்டு வர அரிதாக மட்டுமே செயல்படுகிறது. தனிநபர் அனுபவங்கள் அவ்வப்போது தேவை குறைந்த தகலாகவோ அல்லது பெரிய வாதங்களுக்கான உள்ளீடாகவோ மட்டுமே கருதப்படுகிறது. அவற்றில் அத்தகு ஆராய்ச்சி உருவகிப்புகள் என்பது மதிப்புடையதாக இருக்கும் வேளையில், அவை கோட்பாடுகளுக்கு பங்களித்து கொள்கை மற்றும் நடைமுறைகளுக்கு தேவையான தகவல்களை வழங்குகிறது, ஒரு குறிப்பிட்ட சாரார் பார்வையாளர்களை குறி வைக்கிறது. சமீப வருடங்களாக ஏற்பட்ட தொடர் பேரிடர் நிகழ்வுகள் மற்றும் தற்போதைய கோவிட்-19 பெருந்தொற்று ஆகியவை இந்த நிதர்சனத்தின் அனுபவங்கள் அதிக பரவலாகவும் சர்வதேச அளவில் தொடர்புடையதாகவும் மாறிவருகிறது எனப்பொருள்படுகிறது. இவையே இத்தொகுப்பை உருவாக்கும்படி எங்களை ஊக்கப்படுத்தியது, மேலும் இதன் வாயிலாக அதிக பார்வையாளர்கள் பார்க்கக்கூடிய அளவிற்கு தனிநபர் மற்றும் மக்கள் வகுப்பு சார்ந்த பேரிடர் அனுபவக் கதைகளையும் மீட்டமைப்பு செயலையும் அமைப்பதற்கு நாங்கள் நோக்கங்கொண்டோம்.

இத்திட்டம் வாயிலாக, எங்கள் ஆராய்ச்சியுடன் காணொளிகள், புகைப்பட கண்காட்சிகள், மற்றும் கட்டுரைகளை பயன்படுத்தி நாங்கள் தொடர்புக்கொண்டோம். இந்த வரைகலைத் தொகுப்பு என்பது எங்களது களப்பணியில் நாங்கள் எதிர்கொண்ட பலதரப்பட்ட கதைகளை எப்படி அது உருவகிக்கிறது என்பதில் ஒருபடி முன்னே சென்று இக்கதைகள் கேட்கப்படுவதற்கான ஒரு அடித்தளத்தை வழங்குகிறது. இக்காட்சிமயம் நிறைந்த கதைகள் அதிகளவிலான பொதுமக்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்கும் ஒரு ஆக்கபூர்வமான, கல்விசாரா சித்தரிப்பை வழங்கி மீட்டமைப்பிற்கான தேவைகளை புரிந்துக்கொள்ள ஒரு மாற்று வழியை வழங்கி அதன் மூலம் சிறந்ததொரு

மீட்டமைப்பிற்கான உதவியை இயலச்செய்யும் என நாங்கள் நம்புகிறோம். இப்புத்தகம் எங்கள் களப்பணி பகுதிகளின் உள்ளூர் பாஷைகளான ஒடிஸா, தமிழ், மற்றும் மலையாளம் ஆகியவற்றிலும் மொழிப்பெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டு, எங்களுடன் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துக்கொண்ட மக்கள் வகுப்பினருடன் பகிர்ந்துக்கொள்ளவும் பட்டுள்ளது.

செயல்முறை

இத்தொகுப்பில் விவரிக்கப்பட்ட கதைகள் இரண்டு முக்கிய பகுதிகளை சுற்றிய வளம் வருகின்றன:

பேரிடர் தாக்கத்தின் கணக்குகள் மற்றும் பாதிக்கப்பட்டோரின் குரல்களில் தெரிவிக்கப்பட்ட மீட்டமைப்பு – இங்கே தினசரி போராட்டங்கள், ஒரு பேரிடரின் விளைவாக அவை எப்படி மோசமடைந்தது, மற்றும் பேரிடருக்கு பிந்தைய செயல்முறைகளிலிருந்து விலக்கு பெறும் கணக்குகள் ஆகியவற்றின் மீது வெளிச்சம் போட்டுக்காட்டும் கதைகளை நாங்கள் வழங்குகிறோம்.

வெளிப்புற குரல்கள் மற்றும் மீட்டமைப்பு மீதான அவற்றின் தாக்கங்கள் மற்றும் அவர்களுக்கு கிடைக்கும் உதவி – இங்கே எப்படி அதிகாரபூர்வ கதைகள் மாநில முன்னுரிமைகள் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள், மற்றும் இது பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் மீட்டமைப்பு மீது எப்படி தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை நாங்கள் வழங்குகிறோம்.

பங்களிக்கும் ஆசியர்களுடன் ஒன்றுசேர்ந்து, இந்த இரண்டு முக்கிய பகுதிகளுடன் ஒன்றிசையும் கதைகைளை அடையாளம் காண நாங்கள் எங்களது கள குறிப்புகளை மறுபரிசீலனை செய்தோம். பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து பெறப்பட்ட எங்களது தேர்வான சாட்சிகளை பரவலான வாசகர்களை ஈடுபடுத்தும் வகையில் எப்படி கதையாக சித்தரிப்பது என்பதை ஆய்வு செய்வது எங்களது பதிப்புரை செயல்முறையில் ஒரு முக்கிய படியாகும். எங்களது சித்தரிப்புகள் எங்களுடன் பகிர்ந்துக்கொள்ளப்பட்ட ஆழமான தனிப்பட்ட கதைகளுக்கு நியாயம் செய்தது என்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும்.

கதை எழுதுவதும் சித்திரங்களை உருவாக்குவதும் கல்விசார் கட்டுரைகளை எழுதும் பயிற்சி பெற்ற ஆராய்ச்சியாளர்களாகிய எங்களுக்கு ஒரு மாறுபட்ட அனுபவமாகவே இருந்தது. எனவே, பதிப்பாசிரியர்கள், பங்களிக்கும் புத்தக ஆசிரியர்கள், மற்றும் ஓவியர்களுடன் சேர்ந்து செயல்படும் ஒரு கூட்டு செயலாக இது ஏற்படுத்தப்பட்டது. முதலில் நாங்கள் ஒரு தெளிவான கதைக்களத்தை எழுதினோம், பின்னர் இரண்டாவதாக, கதையின் உயிரோட்டத்தை தக்கவைத்து அதை ஒரு சுவரஸ்யமான புத்தக கதையாக வடித்தோம். இக்கட்டத்தில், ஓவியம் தீட்டப்பட்ட கதைப் புத்தகங்களின் தோற்றத்தையும் மற்றும் புத்தக பக்கங்கள் முழுவதும் எங்கள் கதையை எப்படி சிறப்பான முறையில் வடிவமைப்பது என்பதையும் புரிந்துக்கொள்ள ஓவியருடன் நெருக்கமாக செயல்படுவது முக்கியமாக இருந்தது. இதைதொடர்ந்து வந்தது புத்தகத்தை தற்போதைய நிலைக்கு கொண்டு வர தேவையான சீராக்கம், கதையை வரிசைப்படுத்துதல், மற்றும் ஓவியம் தீட்டுதல் போன்ற தொடர் செயல்முறையாகும்.

செயல்முறை மீதான பிரதிபலிப்புகளும் வரம்புகளும்

இத்தொகுப்பு தனிநபர் மற்றும் மக்கள் வகுப்பு கதைகளின் தாக்கங்கள் மற்றும் மீட்டமைப்பை முன்னணி படுத்த நோக்கம்கொள்ளும் வேளையில், இக்கதைகள் ஆராய்ச்சியாளர்களால் மத்தியஸ்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். எங்கள் கதைகளின் சித்தரிப்பில் நியாயம் செய்வதற்கான ஒரு முயற்சியில் இக்கதைகளை நேர்மையாக எடுத்துரைப்பதற்கு எங்களது மனக்கோட்டங்களை சரிப்பார்க்க நாங்கள் கவனமுடன் இருந்தோம். பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்கள் வகுப்பினருடன் வேலை செய்வதில் இருக்கும் அபாயத்தையும் மற்றும் இரகசியகாப்புத்தன்மை மற்றும் தனியுரிமையை பாதுகாப்பதில் உள்ள முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, இதில் காணப்படும் அனைத்து பெயர்களும் இடங்களும் கவனமுடன் அடையாள மாற்றம் மற்றும் பெயர் மறைப்பு செய்யப்பட்டுள்ளது. இக்கதை உருவான மாநிலத்திற்குட்பட்ட மாவட்டத்தின் பெயர் மட்டுமே இங்கு வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்களது களப்பணியின் போது மேற்கொள்ளப்பட்ட விரிவான ஊடக ஆவணமாக்கம் என்பது பெயர் மறைக்கும் செயலை மேற்கொள்ளும் அதே வேளையில் இடங்களை கவனமுடன் ஆய்வு செய்து ஒவ்வொரு கதையிலும் காணப்படும் சூழலை

உண்மையாக வழங்க எங்களுக்கு உதவியது.

இத்திட்டப்பணியில், ஒரு பேரிடர் நிகழ்வின் வாயிலாக கடந்த வந்த அனுபவங்களை சித்தரிப்பதிலிருந்து நாங்கள் உணர்வுப்பூர்வமாக விலகியே இருந்தோம். அதற்கு பதிலாக நாங்கள் பேரிடருக்கு பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள், அதாவது பேரிடரின் தாக்கம் மற்றும் மீட்டமைப்பிற்கான வழி ஆகியவற்றின் மீதே கவனம் செலுத்தியுள்ளோம். மேலும் நாங்கள் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் பேசுவதையும் தவிர்க்க முயன்றோம். மாறாக, அவர்களது அனுபவங்களை பகிர்ந்துக்கொள்ளும் ஒரு மாத்தியத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கமாக இருந்தது.

இது ஒரு சவால் எனவே நிரூபணமானது. கருத்தியலாக, மக்களின் அனுபவங்களின் உண்மையான உருவகிப்புகளான கதைகள் மக்கள் மூலமாகவே இயக்கப்பட்டது. இத்தொகையில் வழங்கப்பட்ட அனைத்துக் கதைகளும் கள நேர்க்காணல் மற்றும் அக்கறைக்குழு விவாதங்களிலிருந்து பெறப்பட்டவையாகும், அல்லது அவை பல்வேறு குடும்பங்கள் அல்லது மக்கள் வகுப்புகளின் குரல்களை கேட்டுணர்ந்து கொண்டுவரப்பட்ட உருவகிப்பு கதைகளாகும், அதே வேளையில் அவர்களது வெளிப்படையான போராட்டங்கள் மற்றும் தேவைகளின் உண்மைத்தன்மை பேணிக்காக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, அனைத்து கதைகளும் எங்களால் தவிர்க்கமுடியாத அளவில் மத்தியஸ்தம் செய்யப்பட்டது. இங்கு, இருவகையான உருவகிப்புகளை கொண்டு நாங்கள் சோதனை செய்தோம்:

ஒரு வகையில், பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவங்களை ஒரு ஒருங்கிணைந்த கதைக்களமாக வடிகட்டி எடுத்தோம். அதேவேளையில், அவர்களது குரல்கள் ‘கற்பனை’ கதாபாத்திரங்களுக்கு இடையேயான வசனங்களாக வழங்கப்பட்டது, இங்கே சொல்லப்பட்ட அனுபவங்களும் சம்பவங்களும் நேர்க்காணல்கள், களக்குறிப்புகள், மற்றும் களப்பணியின் போது ஆவணமாக்கப்பட்ட காணொளிகளிலிருந்து பெறப்பட்ட உண்மைகளாகும். இக்கதைகளில் கூறப்படும் மக்களின் தனியுரிமையை பாதுகாக்க அவர்களை பற்றிய அடையாளங்களை நாங்கள் கவனமுடன் மறைத்துள்ளோம் என்பதை மீண்டும் ஒரு முறை இங்கே கூறிக்கொள்கிறோம்.

மற்றொரு வகையில், எங்களை நாங்களே ஆராய்ச்சியாளர்களாக கதைக்குள் புகுத்திக்கொண்டோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தைக்கு பதிலாக பாதிக்கப்பட்ட மக்களுடன் நாங்கள் களத்தில் மேற்கொண்ட பல்வேறு நேர்காணல்கள் மற்றும் பேச்சுவார்தைகளை இங்கே சித்தரித்துள்ளோம். மீண்டும், பல்வேறு விவாதங்களிலிருந்து கருத்துகளை பிரித்தெடுத்து கதையை தெளிவாக சொல்லும் நோக்கத்திற்காக அவற்றை கோர்வையாக சேர்த்தோம்.

பூமி நெடுகிலும் அதிகரித்து வரும் பேரிடர்களுடன், பேரிடர் தாக்கத்தின் முன்னணி கணக்குகள் மற்றும் அதிகளவிலும் அவ்வப்போதும் பாதிப்புக்குட்படும் மக்களின் மீட்டமைக்கப்படும் அனுபவங்கள் என்பது அதிகளவிலான மனிதாபிமானத்திற்கும் கண்ணியமான மீட்டமைப்பிற்கான உத்திகளுக்கும் நேராக வழிநடத்தும் என்று நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். இங்கு நாங்கள் வழங்கியுள்ளது அத்தகு ஒரு சோதனை தயாரிப்பும் எதிர்கால பெருமுயற்சிகளுக்கான ஒரு திட்ட அறிக்கையுமாகும்.

சூறாவளி புகலிடம்

வினிதா நல்லா மற்றும் நிகால் ரஞ்சித்

மே 2019

மிக தீவிர சூறாவளி புயல் ஃபானியால் ஒடிசா மாநில பூரி மாவட்டத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. பூரி, கோர்தா, கட்டாக், ஜகத்சிங்பூர், மற்றும் கன்ஞம் ஆகிய கடலோர மவாட்டங்கள் தீவிரமாக பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டது.

சூறாவளிக்கு முன்பு பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்த மாவட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். சுறாவளி புகலிடங்களிலிருந்த (இது அந்த பகுதிகளில் பாட்டியா கர் என்றும் அழைக்கப்படும்) சிலரது அனுபவங்களை கீழே காணலாம்.



கோர்தா

பிரம்மாபூர்

கோபால்பூர்


கட்டாக்
பூரி
ஜகத்சிங்பூர்
பாராதீப்
வங்காள விரிகுடா
மாவட்டம்
சூறாவளி பாதை
முக்கிய நகரங்கள்
களப்பணி பாதை

ஃபானி புயல் தாக்கி ஒரு வாரம் கழித்து

ஆளுங்க எல்லாம் மேலேயும் விலங்குங்க எல்லாம் கீழேயும் இருந்தோம். இந்த விலங்குங்க எல்லாம் எங்களோட பொழப்புக்கு ரொம்பவே அவசியம். விலங்குகள தங்க வைக்க எங்களுக்கு வேற இடம் இல்ல...
அதிகமா காத்தும் மழையும் இருந்ததால அதுல கொஞ்ச விலங்குங்க செத்து போச்சு.
நாங்க போற சமயத்துல சூறாவளி புகலிடம் ரொம்ப மோசமான நிலைமையில இருந்தது. அதை சுத்தமா பராமரிக்கவே இல்ல. அங்க குடிக்கிறதுக்கும் புழங்கறதுக்கும் தண்ணியே இல்ல...
சூறாவளிக்கு பின்னாடி ஒருநாள் கழிச்சி தான் எங்களுக்கு சாப்பாடே வந்தது. சாப்பாட்டுக்கு பதிலா எங்களுக்கு பணத்த கொடுத்தாங்க, நாங்களே தான் சமைச்சி சாப்பிட்டோம்.
ரெண்டு வாரம் ஆகுது, இன்னும் மின்சாரம் வரல...

ஒரு சூறாவளி புகலிடத்தின் வரைபடம்



சூறாவளி புகலிடங்கள் முதலில் வங்கதேசத்தில் தான் 1960 களில் கட்டப்பட்டது, அதைத்தொடர்ந்து 1970 களில் இந்தியாவின் ஆந்திர பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய சூறாவளிக்கு பின்னர் அந்த மாநிலத்திலேயும் அது கட்டப்பட்டது. சூறாவளி சமயத்தில் மக்களை வெளியேற்றி பாதுகாக்க கிராமப்புறங்களில் கல்லு வீடுகளோ அல்லது உறுதியான கட்டுமானங்களோ இல்லாத .காரணத்தால் இந்த சூறாவளி புகலிடங்கள் அங்கு கட்டப்பட்டன. அப்போது கிராமப்புறங்களில் மக்கள் தொகை மிகவும் குறைவாக இருந்ததால் மக்களை அங்கு தங்க வைப்பது எளிதாக இருந்தது. **ஆனால் இப்போது, கிராமங்களில் மக்கள் தொகை அதிகரித்துவிட்டதால் அவர்களை** தங்க வைப்பதற்கான கட்டுமானங்கள் வெகு குறைவாக உள்ளது.

ஆனால், கடலோரத்தில் காணப்படும் உப்பு காற்றால் ஆரம்பத்தில் கட்டப்பட்ட புகலிடங்கள் விரைவாக சீரழிந்துவிட்டது. அதைத்தொடர்ந்து பன்முக பயன்பாடு கொண்ட சூறாவளி புகலிடங்கள் கட்டப்பட்டது, அதை நாம் இப்போது ஒடிசா மாநிலத்தில் காணலாம். சூறாவளி காலம் இல்லாத போது இவை சமுதாய கூடங்களாகவும் பள்ளிக்கூடங்களாகவும் பயன்படுத்தப்படும், இதன் மூலம் இவை ஆண்டு முழுவதும் சீராக பராமரிக்கப்படும்.


சிலிகா பகுதி ஒட்டிய ஓரிடத்தில்
இந்த புகலிடத்த இப்போ பார்க்கலாம். உள்ள ஆட்கள் இருக்கிறத என்னால பார்க்க முடியுது, வேணும்னா நாம அவங்க கூட பேசி பார்க்கலாம்.


நாங்க பெங்களூர்ல இருந்து வேலை செய்ற ஆராய்ச்சியாளருங்க. அதோட ஃபானி புயலால ஏற்பட்டிருக்கிற தாக்கத்த பத்தியும், அதனால மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற அனுபவத்தி பத்தியும் நாங்க ஒரு ஆய்வ செஞ்சிக்கிட்டு வரோம்.
நாம உள்ள போலாமா?


சூறாவளி வீசறப்ப நீங்க இங்க இருந்தீங்களா?
ஆமா


சில புகைப்படங்கள் எடுக்கலாமா?


இப்படி வாங்க

சூறாவளி நேரத்துல, இந்த சூறாவளி புகலிடத்துல கிட்டத்தட்ட 200 குடும்பத்துக்கு மேல தங்கியிருந்தாங்க. இங்க ரொம்பவும் கூட்டமா இருந்தது...


இங்க இருக்கிற ரெண்டு பெரிய அறையில ஆண்கள் ஒரு அறையிலேயும் பெண்கள் ஒரு அறையிலேயும் தங்கி இருந்தாங்க. யாரும் இங்க குடும்பம் குடும்பமாக தங்கியில்ல...

சூறாவளி ஓஞ்சி ஒரு வாரம் கழிச்சி தான் மாநில அரசாங்க சார்பா சாப்பாடு கொடுத்தாங்க... ஆனா இங்க தண்ணீ உப்பா தான் இருந்தது. லாரி மூலமா தண்ணீ கொண்டு வர வேண்டியிருந்தது.


ஆனா, சூறாவளி ஓஞ்சி ரெண்டு வாரம் ஆன பின்னாடியும் இங்க ஜனங்க இன்னும் தங்கியிருக்காங்க?!
நாங்க எங்க போறது? எங்களோட வீடு மொத்தமா பாழாப்போச்சே..

சில பேரோட வீட்டு கூர மட்டும் தான் சேதமாகியிருந்தது, அத அவங்க அரசாங்கம் தந்த தார்பாலின வெச்சி மூடிட்டாங்க. ஆனா, எங்களுக்கு வீட்டு செவுரே வீழுந்து போயிருக்கு.


அரசாங்கத்துக்கிட்ட இருந்து எங்களுக்கு ஏதாவது உதவி கிடைச்சா, எங்களால எங்க வீட்ட திரும்ப கட்ட முடியும்.


நாங்க மீனவர்கள், சூறாவளியால எங்களோட படகு வலை எல்லாம் சேதமா போச்சி. எங்களால மீன் பிடிக்கவே போக முடியல. நாங்க ரெண்டு வாரமா எதுவுமே சம்பாதிக்கல.


அப்போ எங்களால இங்கிருந்து சீக்கிரமா போக முடியும்.
எங்களுக்கு தேவையான விஷயத்த சொல்லி இந்த சூறாவளி புகலிடத்த சுத்தி காமிச்சதுக்கு ரொம்ப நன்றி



ஒருசில மாதங்கள் கழித்து, ஆகஸ்டு மாதத்தில்
மே
ஜூன்
ஜூலை
ஆகஸ்ட்
சைலோனே ஷெல்டர்
குடியிருப்பு
நாம மே மாசத்துல போயி பார்த்த சூறாவளி புகலிடத்துல இருந்து இந்த கிராமம் கொஞ்ச தூரத்துல தான் இருக்கு...
குடியிருப்பு
குடியிருப்பு

நமக்கு உள்ளூர்ல இருக்கிற ஆள் மூலமா பஞ்சாயத்து தலைவர பார்த்து இங்க பேட்டி எடுக்க அனுமதி வாங்கியிருக்கேன்.



நேரம் இருக்கிற ஒரு சில கிராமத்துக்காரங்க நம்ம கூட பேச இங்க கிராமத்து பள்ளிக்கூடத்துல காத்துக்கிட்டு இருக்காங்க...




ஆமா, அது கொஞ்சம் பழசு, அதனால நாங்க எல்லாரும் தங்கறதுக்கு அங்க போதுமான இடம் இல்ல.
இங்க கழிவறை எல்லாம் சுத்தமாவே இல்ல
புயல் நின்னதும் நாங்க உடனடியா அங்கிருந்து கிளம்பி வந்து எங்க வீட்ட தார்பாலின், ஓலை எல்லாம் வெச்சி சேதத்த சரிசெஞ்சிட்டோம்
அங்க ஒரே கூட்டமா இருந்தது, நூத்துக்கனக்கான ஆட்கள 2 அறையில போட்டு தினிச்சிட்டாங்க
அது ரொம்ப பழைய கட்டிடம், அதோட அத சரியாகூட பராமரிக்கல

முன்னாடி எல்லாம் நாங்க பக்கத்து கிராமத்துல இருக்கிற ரெட் கிராஸுக்கு போவோம். ஆனா அது ரொம்பவே தூரமா இருந்தது. பின்னாடி எங்க கிராமத்துலேயே ஒரு சூறாவளி புகலிடத்த கட்டுனாங்க. ஆனா அத சுத்தமா பராமரிக்கிறதே இல்ல...

ரெட் கிராஸ்

1999 -ல வந்த சூப்பர் புயலுக்கு பின்னாடி

ஆமா, பக்கத்து கிராமத்துல இருக்கிற இந்த சூறாவளி புகலிடத்த சூப்பர் சூறாவளிக்கு பின்னாடி ரெட் கிராஸ் கட்டுனாங்க.

சூறாவளி புகலிடம் முன்பு

சூறாவளி புகலிடம் தற்போது.

இந்த சூறாவளி புகலிடத்த ஏன் பராமரிக்கிறதில்ல? பராமரிப்பு பொறுப்புல யாருமே இல்லையா?

பாக்கப்போனா, எங்க கிராமத்துல இருக்கிற சூறாவளி புகலிடத்த பூட்டி வெச்சி வருஷத்துல எப்பவாவது தான் பயன்படுத்துவாங்க... அதனால தான் நாம போகும் போது அது ரொம்ப மோசமான நிலைமையில இருக்கு

சூறாவளி புகலிடத்த பாத்துக்குற கிராம நிர்வாக கமிட்டி அவசர நேரத்துல மட்டும் தான் அங்க போக எங்கள அனுமதிப்பாங்க.

Red Cross
Batiya Ghar

நீங்க சூறாவளி புகலிடத்த பாடியா கர்னு சொல்றத நான் கவனிச்சேன். ஏன் அப்படி?


விலங்குங்க தங்கற இடத்த தான் நாம கொட்டகனு சொல்லுவோம். நாம விலங்குங்க கிடையாதே. இப்படிப்பட்ட நாட்கள்ல அது தான் நமக்கு வீடு மாதிரி, அதனால தான் நாங்க அத பாட்டியா கர்னு சொல்றோம்.

காத்திருத்தல்



யெஷோதரா உடுப்பா




தமிழகத்தின் ஓரிடத்தில் அமைந்துள்ள ஒரு மறுகுடியேற்ற காலனி



வணக்கம்
வணக்கம்


நான் அனிதா, நாங்க பெங்களூர்ல இருந்து வரோம். சுனாமிக்கு பின்னாடி ஜனங்க இங்க எப்படி மீண்டு வந்திருக்காங்கனு தெரிஞ்சுக்க நாங்க இங்க வந்திருக்கோம்.


உங்க வீட்ட பத்தி என்கூட பேச உங்களுக்கு நேரம் இருக்குமா?
சொல்றேன்

சுனாமியில எங்களோட வீடு முழுசா பாழானதால இந்த வீட்ட எங்களுக்கு கொடுத்தாங்க. 10 வருஷம் தான் ஆகுது, அதுக்குள்ள செவுத்துல எப்படி தண்ணீ கசியுதுனு பாருங்க

இந்த வீடு எல்லாம்
காண்ட்ராக்ட்
சப்-காண்ட்ராக்ட் மூலமா
அவசர அவசரமா
கட்டுனாங்கனு நாங்க
கேள்விப்பட்டோம்


அந்த சமயத்துல
சிமெண்டு செங்கலுக்கு
எல்லாம் ரொம்ப கிராக்கி
இருந்துது

அதனால, எல்லாமே
விலை ஏறிப்போச்சி.
அதனால பில்டருங்களால
போட்ட பட்ஜெட்ல
வேலைய முடிக்க
முடியாம, இப்படி
தரத்துல கைய
வெச்சிட்டாங்க



என்னோட புருஷன் ஆனந்தவேல், அவர் ஒரு மீனவர். சுனாமிக்கு முன்னாடி நாங்க
கடல் ஓரத்துல ஒரு குடிசையில தான் இருந்தோம்...

அப்புறம், டிசம்பர் 2004 -ல

Hindustan Times

Tsunami smashes Asia





ஒருசில வாரம் கழிச்சி

வீடு வாசல் குடும்பத்த இழந்தவங்களுக்கு ஒரு என்.ஜி.ஓ. தற்காலிகமா தார்பாலின் வீடு கட்டி கொடுத்தாங்க

அரசாங்க நோட்டீஸ்:
உங்க எல்லாருக்கும் நாங்க நிரந்தர வீடு கட்டி தருவோம். இனிமே எதிர்காலத்துல இது மாதிரி எந்தவொரு பேரழிவு வந்தாலும் அந்த வீடு எல்லாத்தையும் தாங்கி நிக்கும்

என்னமோ, இந்த நிரந்தர/கல்லு வீடு தான் நம்ம பிரச்சனைக்கு எல்லாம் ஒரு முடிவு

ஒரு வருடம் கழித்து

செல்வி!

நமக்கு நிரந்தர வீடு கிடைக்க தகுதி இருக்கு...

இன்னும் ஒருசில மாசம் தான், அப்புறம் நாம அந்த வீட்டுக்கு பேயிடலாம்!

ஆனா, வீடு கட்ட அரசாங்க பாத்திருக்கிற இடம் கடலுல இருந்து 2 கிலோ மீட்டர் தூரத்துல இருக்கு! அங்கிருந்து எப்படி மீன்பிடிக்கிற தொழில செய்ய முடியும்னு தெரியல

நம்ம வீடு இருந்த இடம் என்ன ஆகும்?

நம்ம கிட்ட இடம் இருக்கு, வீடு கட்ட பணம் மட்டும் இருந்தா போதும்னு நான் சொன்னேன். ஆனா அதுக்கு அந்த இடம் கடலுக்கு பக்கத்துலேயே இருக்கு, அப்படி இருக்கிறது ரொம்ப ஆபத்துனு சொன்னாங்க

நீங்க பாத்தீங்கனா, என்னோட புருஷன் எப்பவுமே கடலோரத்துல எங்க வீட்டுக்கு பக்கத்துல தான் அவ ரோட படக நிறுத்தி வைப்பாரு. எங்க வீட்டுக்கு முன்னாடி தான் அவரு மத்த மீனவங்க கூட உட்கார்ந்து மீன எல்லாம் தரம் பிரிச்சி எடுப்பாரு. இனிமே அப்படி செய்ய முடியாது. தற்காலிக கூடாரத்துல தங்கறது அந்தளவுக்கு வசதியா இல்ல. அங்க ஒரு சில மாசம் தான் இருப்போம்னு நாங்க நினைச்சோம்

ஆனா, அங்க நாங்க ரொம்ப காலமா தங்கியிருக்க வேண்டியதாயிடிச்சி

2 வருடங்கள் கடந்தது...



நேரம் கடந்து போகிறது...


பின்னர், ஓர் நாளில்
செல்வி, இங்க பாரு!

கடைசியா நமக்கு ஒரு வீடு ஒதுக்கியிருக்காங்க


கடைசியா, 4 வருஷம் கழிச்சி! இந்த வீடு கடல்ல அடிச்சிக்கிட்டு போகாதுனு தோனுது

புது குடியிருப்பு, 2008

செல்வி, நீ கேள்விப்பட்டியா?

கிறிஸ்துதாஸ் குடும்பமும் டேவிட் குடும்பமும் குடியிருப்ப விட்டு வெளிய போறாங்களாம்

இந்த வீட்ட வாடகைக்கு விட்டுட்டு அவங்க கடலுக்கு பக்கத்துலேயே குடிபோகப்போறாங்களாம்

இன்னும் நிறைய குடும்பமும் இந்த குடியிருப்ப விட்டுட்டு போறாங்க

குடியிருப்பு, 2018

நிறைய பேரு போயிட்டாங்க இங்க நிறைய காலி வீட்ட நீங்க பார்க்கலாம், அவங்க எல்லாம் கடலுக்கு பக்கத்துலேயே குடிசை போட்டு போயிட்டாங்க

செல்வி மற்றும் ஆனந்தவள்ளி இல்லம், 2018



என்னோட வீட்டுல கூட நிறைய விரிசல் இருக்கு, அதோட வெயில் காலத்துல ரொம்ப அனலாவும் இருக்கு.


குறைஞ்சது, இந்த வீடாவது கடல்ல அடிச்சிக்கிட்டு போகாதுனு நினைக்கிறேன்... அப்படி ஏதாவது நடக்குமா?

பிழைப்பை தேடி போகிறார்கள்

மைதிலி மாதவன்

வயநாடு, செப்டம்பர் 2019:
அரசாங்க அதிகாரியுடனான நேர்காணல்


பாதிக்கப்பட்ட மத்த மாவட்டங்கள ஒப்பிடும் போது, வயநாட்டுல உயிரிழப்புகள் அதிகமா இருக்கு.
2018 -ல ஏற்பட்ட வெள்ளம் ஏதோ ஒருமுறை நடக்குற நிகழ்வா மட்டும் தான் பார்க்கப்பட்டிச்சி, ஆனா இப்ப சமீபத்துல ஏற்பட்ட வெள்ளத்தையும் நிலச்சரிவையும் வெச்சி இதுமாதிரி பேரிடர்கள் எதிர்காலத்துல அடிக்கடி நடக்கலாம்னு ஜனங்க உணர்ந்துட்டாங்க.
ஆமா...
இந்த வெள்ளத்தால பழங்குடி மக்கள் தான் மோசமா பாதிக்கப்பட்டாங்கனு நான் ஒருசில செய்தி அறிவிப்புகள படிச்சி தெரிஞ்சிக்கிட்டேன்.
அவங்களோட பிரச்சனைகள தீர்க்கிறதுக்கு என்ன நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கு?
உண்மையில பார்க்கப்போனா, கேரளா மாநிலத்திலேயே வயநாடு மாவட்டத்துல தான் அதிகமான பழங்குடி மக்கள் வசிக்கிறாங்க.


வெள்ளத்துல வீடு இழந்த பழங்குடி மக்களுக்கு 6 இலட்ச ரூபாய் இழப்பீடு கொடுத்திருக்கோம், அதே மத்த இனத்த சேர்ந்தவங்களுக்கு 4 இலட்சம் தான் கொடுத்திருக்கோம்.


ஆனா எங்களோட அனுபவத்துல இருந்து என்ன தெரிஞ்சுதுனா பணத்த வாங்குன சில பேர் அத தவறா பயன்படுத்தி இருக்காங்க.

பழங்குடி இனத்த சேர்ந்தங்க கல்வியறிவு இல்லாததால தான் சிரமம்படுறாங்கனு நான் நினைக்கிறேன்... அவங்களுக்காக ஏற்படுத்தியிருக்கிற திட்டத்த எல்லாம் நாம கட்டாயம் மறுபரிசீலன செய்யனும்.

வீடு கட்டுற பொறுப்பையும் அதுக்கான நிதியையும் நாம என்ஜிஓ அமைப்புகள் கிட்ட கொடுக்கலாம்.
அவங்களுக்கு கைல பணம் கிடைக்காது, ஆனா அவங்களோட தேவை பூர்த்தியாயிடும்.

டக்
டக்

உள்ள வாங்க.

நன்றி

சார், இதுவரைக்கும் நிறைய பழங்குடி குடும்பங்களுக்கு இழப்பீடே கிடைக்கலைனும் புகார் வந்திருக்கு.

வீடுகள இழந்த குடும்பங்களுக்கு அவங்களோட வீட்ட திரும்ப கட்ட இழப்பீடு கொடுக்கப்பட்டிருக்கு. பாதிக்கப்பட்ட வீடுகள மின்னணு எந்திரம் மூலமா குறிஞ்சி வெச்சி அவங்க வீட்டுக்கு எந்தளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கோ அதுக்கேத்த மாதிரி நாங்க இழப்பீடு கொடுத்திருக்கோம்.

என்னதான் எல்லாமே சரியா செஞ்சிருந்தாலும், புகார் செய்றதுக்குனே சிலர் இருக்கத்தான் செய்வாங்க.

KERALA FLOODS: ANGER AND UNCERTAINITY IN TRIBAL COLONIES HIT BY FLOODS AND LANDSLIDES

அவங்க பொழப்புக்கு என்ன பண்ணுவாங்க?

2018 வெள்ளமும் நிலச்சரிவும் விவசாயிகளுக்கு தான் அதிகமான சேதத்த ஏற்படுத்தியிருக்கு, அதோட பார்க்கப்போனா அதிகமான பழங்குடி மக்கள் கூட்டம் விவசாய கூலிவேலையில தான் ஈடுபட்டிருக்காங்க.

விவசாயத்துறையில ஏற்பட்டிருக்கிற சேதத்த எல்லாம் மதிப்பிட்டு விவசாய நிலங்கள திரும்பவும் சீர்படுத்துறதுக்கு நீண்ட காலம் எடுக்கும். இது தொடர்பா அரசாங்கம் சீக்கிரத்துல திட்டங்கள அறிவிப்பாங்கனு நான் நம்புறேன்.

பழங்குடி மக்கள் எல்லாம் நதியோரத்திலேயும் காட்டுக்குள்ளேயும் குடியிருக்கிறதால தான் அவங்க இது மாதிரி தீவிர பேரிடர்களுக்கு ஆளாகறாங்க.




அரசாங்க அதிகாரி
எனக்கு நேரம் தந்ததுக்கு ரொம்ப நன்றி

நான் இருட்டுறதுக்கு முன்னாடி பழங்குடி குக்கிராமத்துக்கு போயாகனும். என் கூட பேசுறதுக்கு அங்க இருக்கிறவங்களுக்கு நேரம் இருக்கும்னு நான் நம்புறேன்.


இங்க வீடுங்க எல்லாம் தள்ளி தள்ளி தான் இருக்கு.

என்னோட செல்போன்ல சிக்னல் போயிடிச்சி

வயநாட்டுக்குள்ள ரொம்ப தூரம் தள்ளி வந்திருக்கோம்னு நினைக்கிறேன்

வணக்கம், என் பேரு கீதா. நான் பெங்களூர்ல இருந்து வரேன். நான் வெள்ளத்த பத்தி ஆய்வு செஞ்சிக்கிட்டு இருக்கேன். எங்கூட பேச உங்களுக்கு நேரம் இருக்குமா?
வணக்கம், இங்க நாங்க 17 குடும்பம் வசிக்கிறோம். நாங்க எல்லாம் விவசாய கூலிகளா வேலை செய்றோம். அதோட நாங்க எல்லாம் இங்க ஒரு பெரிய குடும்பம் மாதிரி இருக்கோம். என் பேரு குஞ்சி. நான், என்னோட கணவர், மகள், என்னோட அம்மா எல்லாம் இங்க ஒரே வீட்டுல இருக்கோம்.
வெள்ளத்துல உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்த எனக்கு சொல்ல முடியுமா?

வெள்ளம் வந்தப்ப, எங்கள பஞ்சாயத்து ஆளுங்க வந்து படகுல காப்பாத்தி கூட்டிக்கிட்டு போனாங்க. அங்க முகாம்ல எல்லாம் ரொம்பவே நல்லா இருந்தது...
எங்களுக்கு தேவையானத எல்லாம் அங்க தந்தாங்க: அதாவது, மெத்த, கம்பளி, தலைகாணி எல்லாம். எங்களுக்கு நேரத்துல சாப்பாடு தந்தாங்க, அதோட அங்கிருந்த எல்லாரும் எங்கள நல்லா பாத்துக்கிட்டாங்க...
முகாம விட்டு நாங்க கிளம்பி வரப்ப எங்களுக்கு 20,000 ரூபா தந்தாங்க. அது அப்போதைக்கு தேவைப்பட்ட பண்ட பாத்திரத்த எல்லாம் வாங்க ரொம்பவே உதவியா இருந்தது. ஆனா, அந்த பணத்த வெச்சி எங்களோட வயக்காட்ட பயிர் வைக்க தயார் செய்ய முடியல.

எங்க நிறைய பேரோட வீடு நல்லா இருந்தது, ஆனா சில வீடு மட்டும் சேதாமாயிருந்தது.

இந்த சேதாரத்த கணக்கிட அரசாங்க அதிகாரிங்க இங்க வந்தாங்க. அதுல சிலருக்கு மராமத்து வேலை பாக்க பணம் தந்தாங்க.

எங்களுக்கு அரசாங்கத்து கிட்ட இருந்தும் மத்தவங்க கிட்ட இருந்தும் உதவி கிடைச்சது...

...9 மாசம்க ஆகியும் கூட எங்களுக்கு வருமானத்துக்கு எந்த வழியும் இல்ல!

அது எதுக்கு?

வெள்ளத்துக்கு முன்னாடி நீங்க பாக்குற இந்த பண்ணையாரோட வயக்காட்டுல தான் நாங்க எல்லாரும் வேலை செஞ்சிக்கிட்டு இருந்தோம்...

நீங்க கவனிச்சிருப்பீங்கன்னு நினைக்கிறேன், நிலம் எப்படி பட்டுப்போயிருக்கு பாருங்க. இந்த வெள்ளம் மணல அடிச்சிக்கிட்டு வந்து நிலம் பூராவையும் பாழாக்கிடிச்சி.

வெள்ளத்தால சேதமான பயிருக்கெல்லாம் பண்ணையாருக்கு இழப்பீடு கிடைச்சுது. ஆனாலும் இதுவரைக்கும் நிலத்துல பயிர் செய்யவே முடியல.


நாங்களும் இந்த வயக்காட்ட நம்பி தான் இருக்கோம்னு எல்லாருமே மறந்துட்டாங்க. எங்களுக்கு இருந்த ஒரே வருமானமும் இப்ப இல்லாம போச்சு!
இது சம்பந்தமா நீங்க யாரையாவது போய் பார்த்தீங்களா?


பஞ்சாயத்துல இருந்து மாவட்ட அரசு அதிகாரிங்க வரைக்கு போய் பார்த்துட்டோம், ஆனா எந்த பலனும் இல்ல.
கொஞ்ச நாளைக்கு முன்னாடி வயநாடு மாவட்ட அலுவலகத்துல ஒரு அரசாங்க அதிகாரிய போய் பார்த்தோம், அதோட அவர நாங்க முழுசா நம்புனோம். ஆனா, அவரால எதுவுமே பண்ண முடியல...
ஆரம்பத்துல எங்களுக்கு கிடைச்ச உதவி ரொம்ப நல்லா இருந்தது. ஆனா, இந்த இழப்புல இருந்து மீண்டு வரனும்னா எங்களுக்கு பொழப்புக்கு ஏதாவது இருந்தா தான் ஆச்சு.
நாங்க கலக்டர கூட போய் பார்த்தோம், ஆனா எதுவுமே பிரயோஜனப்படல.
உங்களுக்கு ஏற்பட்ட இந்த சோகத்தை எல்லாம் படம் பிடிக்க (பத்திரிக்கைகாரங்க) மீடியாவுல இருந்து யாராவது வந்தாங்களா?


நாங்க டவுன்ல இருந்து ரொம்ப தூரத்துல இருக்கிறதால எந்த (பத்திரிக்கைகாரங்களும்) மீடியாவும் எங்கள வந்து படம் பிடிக்கல.
எல்லாருக்கும் நல்லா தெரிஞ்ச இடத்தையும், அதோட அதிக சேதாரம் ஏற்பட்டிருக்கிற இடத்தையும் மட்டும் வந்த படம் பிடிச்சிட்டு போயிட்டாங்க.
முன்னாடியெல்லாம் நிறைய விஷயத்துக்கு எங்கள ஒதுக்கி வெச்சாங்க. இப்போ, இந்த வெள்ள நிவாரணத்திலேயும் எங்கள ஒதுக்கி வெச்சிருக்காங்க.

வேற ஏதவாது
வேலை செ ய்றீங்களா?

ஒரு என்.ஜி.ஓ. நிறுவனம்
எங்களுக்கு பறவையும்
கால்நடையும்
தந்திருக்காங்க. அதுல
இருந்து எங்களுக்கு
கொஞ்சம் காசு வருது.
ஆனா அது எங்களுக்கு
போதுமானதா இல்ல.

கட்டுமான தொழில்ல
எங்களுக்கு வேலை கிடைக்கு
ஆனா அந்த வேலைய நாங்க
செய்ய விரும்பல...


எங்க வீட்டு ஆம்பளைங்க எல்லாம் வயக்காட்டு
வேலைய தேடி வயநாட்டுல இருந்து கூர்க்
போயிட்டாங்க.
KARNATAKA
KERALA
அரசாங்க தந்த பணமும் என்.ஜி.ஓ.
செஞ்ச உதவியும் எங்களுக்கு
ரொம்பவே உதவியா இருந்தது.

ஆனா, எங்களோட வயல் நிலத்த திரும்பவும்
பழைய மாதிரி மாத்தியாச்சுனா, நாங்க திரும்பவும்
பயிர் செய்ய ஆரம்பிச்சுடுவோம். அப்போ, இது
மாதிரி வேலை தேடி ஊரவிட்டு வெளியே போக
வேண்டிய அவசியம் இருக்காது.

விளையாட ஒரு புது இடம்



ஐஷ் மிதா அரவிந்த்

சென் னன புறநகர்பகுதியில் ஒரு மறுகுடியேற்ற காலனி...

அக்கா, ஒரு டீ?

நான் சென் னனயில இருந்து வர ஒரு ஆரொ¨சோளர். என் யனாட யபரு ோஸ் மின். இங்க குடியிருக்கிற ஜனங்கயளாட யபசி இந்த காலனிக்கு வந்ததுக்கு பின் னாடி அவங்கயளாட வாழ்க்னக எப்படி மாறியிருக்குனு நான் சதரிஞ்சுக்கனும்

நீ ங்க எங்கிருந்து வரீங்கம்மா? இங்க ஏதாவது உங்களுக்கு யவனல இருக்கா?

ஆமாக்கா

ெரி, அக்கா, நீ ங்க எப்படி? உங்க யபரு என் ன? இங்க எத்தன வருஷமா இருக்கீங்க?

யபாட யபரு பியரமா. நான், என் புருஷன், மகன் எல்லாரும் இங்க ஒரு வருஷத்துக்கு முன் னாடி குடியேறி வந்யதாம்.

இங்க வந்ததுல இருந்து எங்க வாழ்க்னக சராம்பயவ மாறியிருக்கு...

அப்படிோ... ெரி, அக்கா, இதப்பத்தி இன்னு விலாவரீரியா சொல்றீங்களா?

அட, என் புருஷனுக்கும் நானும் இங்க யவனல யதட சராம்பயவ கஷ் டப்பட்யடாம்... ஆனா, கனடசியில சில மொம் கழெி்சி, இந்த டீக்கனடே நான் திறந்யதன், அயதாட அவரு யவனல ேதேச நகரத்துக்கு யபாயிட் டு வராரு

